தீப்பெட்டித் தொழிற்சாலைகளை நம்பி வாழும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும், தீப்பெட்டித் தொழில் சிறு முதலீட்டாளர்களும் மிகவும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். அதனால், அந்தப் பகுதியில் பதட்டமானதொரு சூழ்நிலையில் தினமும் உண்ணாவிரதம், மறியல் மற்றும் போராட்டம் நடக்கிற சூழல் இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான தீப்பெட்டித் தொழிலாளர்கள் வேலையிழந்து இன்றைக்கு நடுத்தெருவில் நிற்கிறார்கள். எனவே, உடனடியாக பொட்டாஷியம் குளோரேட் தட்டுப்பாட்டை நீக்கி மீண்டும் தீப்பெட்டித் தொழிலுக்கு உகந்த ஒரு சூழ்நிலையை உருவாக்கிடுவதற்காக இந்த அரசின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

**(உ) கடலூர் மாவட்டம், தீ விபத்துகளைத் தடுத்து, பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் மற்றும் கான்கிரீட் வீடுகள் வழங்குதல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடலூர் மாவட்டத்தில், கடந்த இரண்டாம் தேதியிலிருந்து இன்று வரை பல இடங்களில் நிறைய வீடுகள் எரிந்துவிடுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. அதாவது, கடந்த 2–7–2009 அன்று காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி எல்லையில், கோட்டைமேடு என்ற இடத்தில் 21 வீடுகளும், அதைத் தொடர்ந்து என்னுடைய தொகுதியில் செங்கல்மேடு என்ற கிராமத்தில் 41 வீடுகளும், 15 ஆம் தேதியன்று, என்னுடைய தொகுதியில், எணமங்கலம் என்ற கிராமத்தில் 80 வீடுகளும், சி. சாத்தமங்கலம் என்ற என்னுடைய தொகுதியியை சேர்ந்த கிராமத்தில் 16 வீடுகளும், காட்டுமன்னார்கோவில் ஒன்றியத்தில் வானமாதேவி என்ற ஊரில் 49 வீடுகளும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** இன்று, கீரப்பாளையத்தில் 8 வீடுகளும் எரிந்து சாம்பலாகியிருக்கின்றன. இந்தத் தீ விபத்துகளில் காட்டுமன்னார்கோவிலைச் சேர்ந்த சந்தானம்மாள் என்ற வயது முதிர்ந்த பெண்மணி மரணம் அடைந்திருக்கிறார்.

2009 ஜூலை 21] [திரு. ஆ. அருண்மொழிதேவன்]

*முற்பகல் 10–00*

அதேபோல, வானமாதேவியில் ஆனந்தி என்ற ஒரு பெண்மணி இறந்திருக்கிறார். இந்தத் தீ விபத்துகளுக்கான காரணத்தைக் கண்டறிவதோடு, இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதோடு வீடிழந்த அனைவருக்கும் கான்கிரீட் வீடுகள் அமைத்துத் தருவதற்கும் அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

### (ஊ) மறைந்த முன்னாள் முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் சகோதரர் மகனுக்கு வீடு ஒதுக்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரையாது வழங்குவதையே வாழ்க்கையின் ஒரே குறிக்கோளாகக் கொண்டவர் புரட்சித் தலைவர் அவர்கள். அவருடைய சகோதரர் திரு. சக்ரபாணி அவர்களுடைய மகன் திரு. சந்திரன் அவர்களுக்கு, சென்னையில் வாடகை கொடுத்து வசிக்க முடியாத ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன்பு, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம், தன்னுடைய மனைவி சித்ரா பெயரிலே வீடு ஒதுக்கித் தருமாறு கேட்டிருக்கின்றார். அவரால் வாழ்ந்தவர்கள் பலர் இந்த அவையில் இருந்தாலும், அவர்கள் மறந்துவிட்ட போதிலும், 'ஆத்ம நண்பர்' என்ற முறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு ஒரு வீடு ஒதுக்கித் தருவார்களா என்பதனை அறிய விரும்புகிறேன். அதற்குண்டான ஆணையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறப்பிப்பார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தச் செய்தி குறித்து என்னிடத்திலே எந்த மனுவும் இதுவரையில் தரப்படவில்லை; தரப்பட்டால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

[2009 ஜூலை 21

### (உ) கடலூர் மாவட்டம், தீ விபத்துகளைத் தடுத்து பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் மற்றும் கான்கிரீட் வீடுகள் வழங்குதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய காட்டுமன்னார்கோவில் தொகுதிக்குட்பட்ட கோட்டைமேடு பகுதியிலே 29 வீடுகள் தீக்கிரையானபோது, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே அதுகுறித்து முறையிட்டதும், அங்கே உயிரிழந்த சந்தான மேரி என்ற மூதாட்டியின் குடும்பத்திற்கு உடனடியாக ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு, அந்தத் தொகை இன்றைக்கு அவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றது.

அதுபோலவே, இன்றைக்கு வானமாதேவி பகுதியிலே 49 வீடுகள், அருகில் இருக்கிற எணமங்கலத்திலே 82 வீடுகள், சாத்தமங்கலத்தில் 14 வீடுகள் என்று ஏராளமான வீடுகள் எரிந்து போன சம்பவத்தை நேற்றையதினம்கூட, மாண்புமிகு முதல்வரிடத்திலே நான் முறையிட்டுச் சொன்னேன். அங்கே வீட்டைப் பறிகொடுத்தவர்களுக்கு முழுமையாக, உடனடியாகத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் வைத்திருக்கின்றேன். குறிப்பாக, செங்கல்மேடு பகுதியிலே எரிந்த வீடுகள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எழுத்துப்பூர்வமாகவும் முறையீடு ஒன்றை அளித்திருக்கின்றேன். தற்போது வீடுகள் எரிந்தால் கருணைத் தொகையாக 2,000 ரூபாய் உடனடியாக வழங்கப்படுகிறது. ஒரு வீட்டைப் புதுப்பித்துக் கட்டிக் கொள்வதற்கு அது போதுமானதாக இருக்காது என்பதால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைக் கருணையோடு பரிசீலித்து, அந்தத் தொகையை குறைந்தபட்சம் 5,000 ரூபாய் என்ற அளவிலே உயர்த்தி, உத்தரவிட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் வட்டாரத்தில் வீடுகள் எரிவதைப் பற்றி அ.தி.மு.க. உறுப்பினரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே திரு. ரவிக்குமார் அவர்களும் இங்கே

எடுத்துரைத்திருக்கிறார்கள். நேற்றையதினம் திரு. ரவிக்குமார் அவர்களும், அவருடைய கட்சியின் தலைவர் திரு. திருமாவளவன் அவர்களும் என்னைச் சந்தித்து, சிதம்பரம் வட்டாரத்திலே நடைபெறுகின்ற இந்தத் தீ விபத்துகளைப் பற்றி விரிவாகக் கூறியிருக்கின்றார்கள். அப்பொழுது, இன்றைக்குச் சொன்னதுபோல், '2,000 ரூபாய் நஷ்ட ஈடு போதாது; அதை அதிகப்படுத்தித் தரவேண்டும்' என்று சொன்னார்கள். இவற்றைப் பற்றியெல்லாம் அரசு தீர விசாரித்து, ஆலோசித்து, நல்ல முடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தீ விபத்துகள் சிதம்பரம் வட்டாரத்திலே இப்படித் தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு என்ன காரணம் என்பதை அறியுமாறு போலீஸ் அதிகாரிகளுக்கும், உயரதிகாரிகளுக்கும் உத்தரவிடுவதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### (ஏ) பெண்ணாகரம் ஒன்றியம், நாகதாசம்பட்டி, பட்டாசுத் தொழிற்சாலை விபத்தில் மரணமடைந்தவர் குடும்பத்துக்கு நிவாரணம் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையெட்டு வள்ளல்களிலே முதல் வள்ளலாக விளங்கிக் கொண்டிருக்கின்ற தமிழினத்தினுடைய தலைவரும், தமிழகத்தினுடைய பொற்கால ஆட்சியினுடைய சூத்ரதாரியுமான தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே, இன்றைக்குத் தமிழகத்தில் பலனடையாத எந்தவொரு தனி மனிதனும் இல்லையென்ற அளவிற்குப் பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற தலைவருடைய ஆட்சியிலே, பெண்ணாகரம் ஒன்றியத்திலே, நாகதாசம்பட்டி என்ற கிராமத்திலே உள்ள ஒரு சிறிய பட்டாசுத் தொழிற்சாலையிலே ஏற்பட்ட தீ விபத்தினால் ஒரு பெண்மணி இறந்துவிட்டார். தலைவர் அறிவித்திருக்கின்ற அந்த உதவியை அந்தப் பெண்மணிக்கும் நல்குவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஒருவர் விபத்திலே இறந்துவிட்ட செய்தியைச் சொல்வதற்கும், அவர்களுக்கு நிதி